முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**தரம் 10 - மூன்றாம் தவணைப்பரீட்சை 2017 நவம்பர்**

**Grade 10 - Third Term Examination. 2017 November**

| தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் Communication & Media Studies | 87 | T | I, II | மூன்று மணித்தியாளம் Three Hours |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்:

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. தொடர்பாடல் செயன்முறையின் செய்தியைப் பெறுபவர்.
   (1)ஒரு குழு அல்லது ஒரு நிறுவனம்
   (2) ஒரு தனிநபர், ஒரு குழு அல்லது நிறுவனம்
   (3) ஒரு தனிநபர்
   (4) ஒரு தனிநபர் அல்லது ஒரு குழு

2. நபரகத் தொடர்பாடலுக்கு எடுத்துக்காட்டாக அமைவது
   (1) சுய எண்ணக்கரு உருவாக்கம் (2) எச்சரிக்கை விடுத்தல்
   (3) உரையாடல் (4) குறைகூறல்

3. சொல்சார தொடர்பாடலுடன் தொடர்பபடாத அம்சம்.
   1) உடல் அசைவுகள் (2) பேசுதல்
   (3) கண்தொடர்பு (4) சமிக்ஞைகள்

4. கிராமியக்கலைகள், நம்பிக்கைகள், சடங்குகள், போன்ற மரபுவழியான அம்சங்கள் தொடர்புபடும் தொடர்பாடல் வடிவம்.
   (1) செவிப்புல தொடர்பாடல் (2) எழுத்துமூல தொடர்பாடல்
   (3) கட்புல தொடர்பாடல் (4) வாய்மொழி தொடர்பாடல்

5. பின்வருவனவற்றில் முன்னாயத்தம் செய்து பயன்படுத்தப்படுகின்ற எறிவைசார் எறிவையில் ஊடக உபகரணங்கள் முறையே.
   (1) பல்லூடக எறிவை, பக்கரப்புரட்டி (2) மேந்தலை எறிவை, பல்லூடகஎறிவை
   (3) துரித எறிவை, பக்கரப்புரட்டி (4) வழுக்கி, துரித எறிவை.

6. வானொலி ஊடக செயற்பாட்டில் வான் நேரத்தை தீர்மானிக்கும் பணியுடன் தொடர்புடையவர்
   (1) தயாரிப்பாளர் (2) அறிக்கையிடுவோர்
   (3) தொழில்நுட்பவியலாளர் (4) நிகழ்ச்சித்திட்ட கட்டுப்பாட்டாளர்.

7. “ குமார் பத்திரிகை ஒன்றில் காணப்பட்ட கவிதை ஒன்றை வாசித்து ஒருவித உணர்வு நிலைக்கு உட்பட்டான் . நாளடைவில் புதிதாக கவிதை புனையும் செயற்பாட்டில் ஈடுபட தூண்டப்பட்டான்.” இச்சம்பவம் தொடர்புபடும் ஊடகம் பிரதிநிதித்துவ எண்ணக்கரு.
   (1) சமூகபடிம எண்ணக்கரு (2) ஆண்- பெண் பால்சமத்துவ எண்ணக்கரு.
   (3) கட்டுருவாக்க எண்ணக்கரு (4) இரசனை உணர்வு எண்ணக்கரு.

8. ''சொலமன் கணணி ஒன்றில் பக்கவடிவமைப்புடன் தொடர்புடைய மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்தி பல வர்ணங்களை பொருத்தமான வகையில் உபயோகித்தும், படங்கள், உருக்களை உள்ளடக்கியும் சொற்களை சுருக்கமாக பயன்படுத்தியும் பொதுமக்கள் கவனத்தை துஸண்டக்கூடிய வகையில் பக்கம் ஒன்றை வடிவமைத்து பிரதி ஒன்றை எடுத்துப் பார்த்துக்கொண்டு இருந்தான்'' இவ் அம்சங்களுடன் தொடர்புடைய அச்சு ஊடகம்.
(1) சுவரொட்டி (2) செய்திப்பத்திரிகை (3) கையேடு (4) சஞ்சிகை

9.
- உயர்தர மூலதனத்துடன் தொடர்புபட்டது.
- பின்னூட்டல் பலவீனமானது.
- கருவி வழியில் முன்னெடுக்கப்படுவது.
- ஊடக கலாசார செயன்முறையுடன் தொடர்புபட்டது.

மேற்கூறிய அம்சங்கள் தொடர்புபடும் தொடர்பாடல் வகை.
(1) ஆளிடைத் தொடர்பாடல் (2) வெகுசன தொடர்பாடல்.
(3) குழுத்தொடர்பாடல் (4) பூகோளத் தொடர்பாடல்

10. இருநபரிடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போது பயன்படுத்தப்பட்ட சொற்களின் கருத்தை விளங்கிக் கொள்வதில் இடர்கள் ஏற்பட்டதுடன், செய்தியை கிரகித்துக் கொள்வதிலும் இடர்கள் ஏற்பட்டன. இத்தகைய நிலையை நன்றாக விவரிக்கும் தொடர்பாடல் மாதிரியுருவை முன்வைத்தவர்
(1) வில்பர் சிராம் (2) டேவிட் பர்லோ
(3) ஷெனோனும் வொரன்லீவர் (4) லக்ஸ்வெல்

11. '' நிறுவனம் ஒன்றின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு கீழ்நிலை ஆளணியினரின் தகவல்களை உயர் முகாமைத்துவம் பெற்றுக்கொள்ளல் அடிப்படையானது'' பின்வருவனவற்றில் கீழிலிருந்து மேல்நோக்கிய தொடர்பாடலுடன் தொடர்புபடாத செயன்முறை.
(1) முன்மொழிவுப் பெட்டி வைத்தல்
(2) சுற்றுநிருபங்கள் அனுப்புதல்
(3) சிறப்புக் குழுக்கள் அமைத்தல்
(4) சிறப்பு கலந்துரையாடலை மேற்கொள்ளல்

12. முறைசாராத தொடர்பாடல் செயன்முறையை விளக்குகின்ற கூற்றுக்களாக.
A. திட்டமிட்ட செயன்முறைக்கு ஊடாக முன்னெடுக்கப்படாதது.
B. முறைசார் தொடர்பாடலை விட வேகமாக முன்னெடுக்கப்படுவது.
C. ஒழுங்கின்றி முறைசாரா வழிகளில் முன்னெடுக்கப்படுவது.
D. குறித்த நோக்குடன் கூடிய செயல் ஒழுங்கு.

மேற்கூறிய கூற்றுக்களுள்.
(1) A,B,C ஆகியன மாத்திரம் உண்மையானவை D பொய்யானது.
(2) B,C ஆகியன மாத்திரம் உண்மையானவை A பொய்யானது.
(3) C.D. ஆகியன மாத்திரம் உண்மையானவை A பொய்யானது.
(4) A,C,D ஆகியன மாத்திரம் உண்மையானவை B பொய்யானது.

13. வீட்டுச் சுவர்களுக்கு வர்ணம் தீட்டுதல், வீட்டு முற்றத்தில் பூங்கா, நீர்த்தடாகம், மீன்தொட்டி அமைத்தல், சொகுசான இருக்கைகள் வைத்தல், நிலத்திற்கு மாபிள் பதித்தல் போன்றன சொல்சாரா தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்தும் எக்காரணியுடன் தொடர்புடையது.
(1) சமூகக் காரணிகள் (2) உடற்காரணிகள்
(3) சூழல் காரணிகள் (4) பொதுக்காரணிகள்.

14. தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படையாக அமையும் தொடர்பாடல் வகை.
(1) குறுந் தொடர்பாடல் (2) அகமுகி தொடர்பாடல்
(3) வெகுசன தொடர்பாடல் (4) ஆளிடைத்தொடர்பாடல்.

15. பின்வருவனவற்றுள் குழுத்தொடர்பாடலுடன் மிகத்தொடர்புபட்ட தொடர்பாடல் நுட்பங்கள்
A. விழிவழித்தொடர்பாடல்
B. தொழில்நுட்ப தொடர்பாடல்
C. பேச்சுத்திறன்
D. வெளிச்சவீட்டு நுட்பம்.
E. கருவிகளைக் கையாளும் நுட்பம்.
(1) A,B,C (2) B,C,D (3) A,C,D (4) C,D,E

16. முறைசாரா தொடர்பாடலின் இயல்புகளாக அமையக்கூடியவை.
A. முறையான திட்டத்திற்கு இணங்கச் செயற்படுபவை.
B. திடீரென ஒன்று கூடுபவரிடையே நிகழ்வது.
C. நோக்கம், இலக்கு கொண்டவை.
(1) A மாத்திரம் (2) B மாத்திரம்
(3) A யும் C யும் (4) மேற்கூறிய யாவும்

17. பல்வேறு சேவைகள், தொழில்கள் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்தல்.
(1) சமூகப் பிரதிநிதித்துவம்
(2) அரசியல் சார்ந்த பிரதிநிதித்துவம்.
(3) ஒழுங்குமுறைப் பிரநிதித்துவம்
(4) பொருளாதார பிரதிநிதித்துவம்.

18. நிரல் A யிற்குப் பொருத்தமான நிரல் Bயில் பொருந்தக் கூடிய விடைத்தொகுதி.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1) மேந்தலை எறிவை | A. புத்தகத்தின் படம் ஒன்றை எறிவையாகக் காட்டும். |
| 2) வழுக்கி எறிவை | B. ஊடுகாட்டித்தாள் பயன்படுத்தப்படும். |
| 3) பல்லூடக எறிவை | C. நேர் புகைப்படலம். |
| 4) துரித எறிவை | D. கணினி உபகரணம் அடிப்படையானது. |

(1) BCDA (2) CBDA (3) ABCD (4) CBDA

19. கணினி சார் வெளியீடு செயல் ஒழுங்கு (DTP) முறைமூலம் பத்திரிகை ஒன்றைத் தயாரிக்கும் செயல் ஒழுங்கு முறையை பொருத்தமாகக் காட்டுவது.
(1) கையெழுத்துச் செய்தி அறிக்கை, கணணி எழுத்துருவாக்கம், மூலப் பிரதியுடன் தயாரிக்கும் செயல் செம்மைப்படுத்தல்
(2) கணினி எழுத்துருவாக்கம், மூலப்பரதியுடன் ஒப்புநோக்கல், செம்மைப்படுத்தல், கையெழுத்துச் செய்தி அறிக்கை
(3) கையெழுத்துச் செய்தி அறிக்கை, மூலப்பிரதியுடன் ஒப்புநோக்கல், கணினி எழுத்துருவாக்கம் செம்மைப்படுத்தல்
(4) கையெழுத்துச் செய்தி அறிக்கை,செம்மைப்படுத்தல், கணனி எழுத்துருவாக்கம், மூலப்பிரதியுடன் ஒப்புநோக்கல்.

20. காரியாலயத்தில் மேலதிகாரியின் கதிரை பெரிதாகவும், சாய்வுள்ளதாகவும் அலுவலக நிலத்திற்கு கம்பளம் விரித்தும் காணப்பட்டது. இச்செயன்முறை வாய்மொழியற்ற தொடர்பாடலில் எத்தகைய காரணியுடன் தொடர்புபட்டது.
(1) சூழல் காரணிகள் (2) உடற்காரணிகள்
(3) சமூகக்காரணிகள் (4) கலாசாரக்காரணிகள்.

21. ஆளிடைத் தொடர்பாடல், வெகுசன தொடர்பாடல் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A- வெகுசன தொடர்பாடல் மூலம் அதிக எண்ணிக்கையான பெறுநர்களை ஒரே தடவையில் தொடர்பு செயன்முறையில் ஈடுபடுத்த முடியும்.
B. ஆளிடைத் தொடர்பாடலின் போது உயர்மட்ட பின்னூட்டல் கிடைக்கும். வெகுசன தொடர்பாடலில் பின்னூட்டல் பலவீனமானது.

C. ஆளிடைத் தொடர்பாடலில் ஊடகக் கருவிகளின் பயன்பாடு அதிகமாகவும், வெகுசன தொடர்பாடலில் முக்கியமற்றவையாக காணப்படும்.

D. வெகுசன தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல் இரண்டும் உயிர்ப்பானதும், நேரடி அனுபவங்களையும் அதனூடான தொடர்புகளையும் ஏற்படுத்தும்.

மேற்படி கூற்றுக்களில் உண்மையானவை.

(1) A,B உண்மையாவை C,D பொய்யானவை
(2) A,C உண்மையானவை B,D பொய்யானவை.
(3) B,C உண்மையானவை A,D பொய்யானவை.
(4) B,D உண்மையானவை A,C பொய்யானவை.

22. பரிசளிப்பு விழா பற்றி மாணவரை அறிவுறுத்துவதற்காக பாடசாலை அறிவித்தல் பலகையில் ஒரு அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது அழைப்பிதழ் ஊடாகவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது உள்ளக தொடர்பாடல் (intercom) ஒலிபரப்பு ஊடாகவும் அறிவுறுத்தப்பட்டது. இச் சந்தர்ப்பங்கள் எந்த தொடர்பாடல் வடிவில் அடங்கும்.
(1) செவிப்புல, கட்புல, எழுத்துமூல தொடர்பாடல் வடிவில்
(2) எழுத்துமூலம், செவிப்புல, கட்புல தொடர்பாடல் வடிவில்
(3) வாய்மொழி மூலம், செவிப்புல, கட்புல தொடர்பாடல் வடிவில்.
(4) கட்புல, எழுத்துமூலம், செவிப்புல தொடர்பாடல் வடிவில்.

23.
சொற்களஞ்சிய விருத்தி
முன் ஆயத்தம்
செவிமடுத்தல் திறன்.

மேற்கூறப்பட்ட அம்சங்கள் சம்பந்தப்படும் தொடர்பாடல் வடிவம்.

(1) வாய்மொழித் தொடர்பாடல் (2) எழுத்து மூலத் தொடர்பாடல்
(3) வாய்மொழி அற்ற தொடர்பாடல் (3) கட்புலத் தொடர்பாடல்

24. பின்வருவனவற்றுள் நியூமிடியா ( Newmedia) வுக்கு எடுத்துக்காட்டுகளாக கொள்ளக்கூடியவை.
(1) டுவிட்டர், பேஸ்புக் (Facebook), Blogs, ஸ்கைப் ( Skype)
(2) வானொலி, டுவிட்டர், தொலைபேசி, இன்ரநெற், சினிமா.
(3) ஸ்கைப் (Skype) டுவிட்டர், (Twitter) பேஸ்புக் (Face book) தொலைக்காட்சி
(4) ஈமெயில், வெப்சைட், ( Website), பத்திரிகை, டுவிட்டர்.

25. சமூக படிமங்களை பயன்படுத்திப் பல்வேறு நிறுவனங்கள் வர்த்தக விளம்பரங்களை மேற்கொள்கின்றன.இதன் நோக்கமாக அமையாதது.
(1) போட்டியிலிருந்து வெற்றி பெறல்
(2) பொருள், உற்பத்திபற்றி இரகசியங்களை வெளிப்படுத்தல்.
(3) பொருட்கள் சேவையை பிரபல்யப்படுத்தல்.
(4) நிறுவனம், பொருள் பற்றிய விபரங்களை தெரியப்படுத்தல்.

26. A பகுதியில் உள்ள உபகரணத்தின் பயன்பாடுகளை காட்டும் B பகுதியின் சரியான ஒழுங்கு.

| <u>A பகுதி</u> | <u>B பகுதி</u> |
|---|---|
| (1) திகதி முத்திரை இயந்திரம் | (A) ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல். |
| (2) பதவி முத்திரை | (B) ஆவணங்களுக்கு திகதியிடல் |
| (3) இலத்திரனியல் அட்டை | (C) தாள்களை பிரதி எடுத்தல். |
| (4) ரோணியோ இயந்திரம் | (D) சட்ட ரீதியான உறுதிப்படுத்தல். |

(1) BDAC (2) ADBC (3) DBCA (4) BADC

27. இலத்திரனியல் சோதனை கருவியின் பயன்பாட்டுடன் தொடர்புபடாத அம்சம்.
(1) அலுவலகங்களில் தகவல்களைப் பேணிப்பாதுகாப்பதற்கு.
(2) சுப்பர் மாக்கட் பொருட் பாதுகாப்பு தேவைகளுக்கு
(3) விமான நிலைய பாதுகாப்புத் தேவைகளுக்கு
(4) வங்கி பாதுகாப்புத் துறை சேவைகளுக்கு.

28.
- பாராளுமன்ற சட்டம் ஒன்றில் கீழ் அமைக்கப்படல்.
- பணிப்பாளர் சபையால் நிர்வாகிக்கப்படல்.

இவ்வியல்பை உள்ளடக்கும் ஊடக உரிமையாளர் அழைக்கப்படும் முறை.
(1) அரசாங்க கூட்டுத்தாபனம் (2) தனியார் கம்பனி
(3) அரச கம்பனி (4) சுயாதீன கூட்டுத்தாபனம்.

29. விளம்பர பீடத்தின் பணிகளுடன் தொடர்புபடாதது.
(1) விளம்பரபீடப் பணிகள் ஆசிரிய பீடத்தினால் தீர்மானிக்கப்படல்.
(2) விளம்பர முகவர்கள் ஊடாக விளம்பரங்கள் பெறப்படுதல்.
(3) பக்க அளவு, நிறம் என்பவற்றை பொருட்டு கட்டணம் தீர்மானிக்கப்படுதல்.
(4) விளம்பர பீடத்திற்கு நேரடியாகவும் விளம்பரங்கள் பெறப்படுதல்.

30. சமையல் நிகழ்ச்சி, கவிதையாக்கம், பொருளியல் நிபுணர்களுடனான நேர்காணல் நிகழ்ச்சிகள் தொடர்புபட்டமையும் ஊடக பிரதிநிதித்துவ எண்ணக்கருக்கள் முறையே.
(1) பொருளாதார பிரதிநிதித்துவம், சமூக பிரதிநிதித்துவம், அழகியல்சார் பிரதிநிதித்துவம்.
(2) சமூக பிரதிநிதித்துவம், அழகியல்சார் பிரதிநிதித்துவம், பொரளாதார பிரதிநிதித்துவம்.
(3) அழகியல்சார் பிரதிநிதித்துவம், சமூக பிரதிநிதித்துவம், பொருளாதார பிரதிநிதித்துவம்.
(4) சமய ஒழுங்கு பிரதிநிதித்துவம் , சமூக பிரதிநிதித்துவம், பொருளாதார பிரதிநிதித்துவம்.

31. ஊடகங்கள் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் தோற்றப்பாட்டை அல்லது ஒரு பிம்பத்தை கட்டியெழுப்பும் பணி தொடர்புபடும் அம்சம்.
(1) சமூக படிமம் (2) இரசனை (3) கட்டுருவாக்கம் (4) அபிவிருத்தி

32. தூர உள்ள பொருட்களை படம் பிடிப்பதற்கும், அதிக எண்ணிக்கையான நபர்களை உள்ளடக்கிய வகையில் படம் பிடிப்பதற்கும் பொருத்தமாக அமையக்கூடிய வில்லை வகைகள் முறையே.
(1) அகல வில்லை, சூம்வில்லை( Zoom) (2) அகலவில்லை, மைக்ரோவில்லை
(3) சூழ்வில்லை, அகலவில்லை (wide) (4) மைக்ரோவில்லை, அகலவில்லை

33. நபரிடைத் தொடர்பாடலில் ஊடுகடத்தியாக ( செல்வழி) பயன்படுத்தக்கூடியது.
(1) செல்லிடப்பேசி, மின்னஞ்சல் (2) ஒலிபெருக்கி, இணையம்.
(3) கையேடு, இணையம் (4) இணையம், செல்லிடப்பேசி

34. “ செய்திகளை கொண்டுவரும் முதன்மையாளன்” என அழைக்கப்படும் வெகுஜன ஊடகம்.
(1) தொலைக்காட்சி (2) வானொலி
(3) பத்திரிகை (4) துண்டுப்பிரசுரம்.

35. பின்வருவனவற்றுள் வானொலி ஊடக இயல்பை பிரதிபலிக்காத கூற்று.
(1) வானொலி ஓர் உடனடி ஊடகமாகும்.
(2) குரலை ஆன்மாவாகக் கொண்ட ஊடகம்.
(3) செவிமடுத்தல் சார்ந்த ஊடக இயல்பை கொண்டது.
(4) உருவங்களையும் ஒலிகளையும் இணைக்கின்ற ஊடகம்.

36. இலத்திரனியல் ஊடகத்துடன் ஒப்பிடுகின்றபொழுது அச்சு ஊடகத்தின் சாதகமான தன்மையாகக் கொள்ள முடியாதது.
   (1) விபரணத்தை கொண்டிருத்தல்.
   (2) அந்த நேரத்தில் மட்டும் பயன்படுத்தக்கூடியது. (கணநிலை)
   (3) கையாள வசதி
   (4) விலை குறைவு

37. தொலைக்காட்சி ஊடகத்தின் முக்கிய தொடர்பாடல் வெளிப்பாடு கோலம்.
   (1) சித்தரிப்பு, பேச்சு
   (2) எழுத்துச், சித்தரிப்பு
   (3) கேட்டல், விளக்கமுறை
   (4) சித்தரிப்பு, கேட்டல்.

38. அச்சு ஊடகம் ஒன்றில் விளம்பரம் ஒன்றிற்கான கட்டணத்தை தீர்மானிப்பதில் தங்கியிராதது.
   (1) விளம்பரத்தின் உள்ளடக்க நிறம்
   (2) விளம்பரத்தின் அளவு
   (3) விளம்பரம் இடம்பெறும் பக்கம்.
   (4) விளம்பரத்தின் உள்ளடக்கத் தன்மை

39. தொலைக்காட்சி செய்தி தொடர்பான தகவல்களில்.
   A. தொலைக்காட்சி செய்தி வானொலி செய்தியிலும் பார்க்க தாமதமானது.
   B. தொலைக்காட்சி செய்தி போட்டி தன்மையில் தங்கியுள்ளது.
   C. தொலைக்காட்சி செய்தி அச்ச ஊடக செய்தியை விட விபரணத்தன்மை கூடியது.
   E. தொலைக்காட்சி செய்தி எப்போதும் நேரடியாகவே ஒளிபரப்பப்படுகின்றுத

   மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை.
   (1) ABC ஆகியன
   (2) BCD ஆகியன
   (3) ABD ஆகியன
   (4) ABCD ஆகியன

40. வானொலி ஊடக நிறுவனத்தின் நிர்மானிப்புக்கள், கட்டங்கள், மின்சக்தி பராமரிப்பு, ஒலிபரப்புக் கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்.
   (1) பொறியியல் அலுவலர்
   (2) தயாரிப்பாளர்
   (3) தொழில்நட்ப அலுவலர்
   (4) அறிவிப்பாளர்.

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

**முதலாம் வினாவையும் எவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) பிருந்தா நேர்முகத் தேர்வுக்காக தனது சுய விபரக்கோவையினை (bio data) கணினி மூலம் தயாரித்துக் கொண்டாள்

1) "நேர்முகத் தேர்வு" என்பது எவ் வகைத் தொடர்பாடல் ஆகும்?
2) கணினியின் உதவியுடன் சுயவிபரக்கோவை தயாரித்தல் எவ்வாறு அழைக்கப்படும்?.
3) கணினி வெளியீட்டுச் செயற்பாட்டின் முக்கியத்துவம் 4 தருக?
4) பக்க வடிவமைப்புக்காக மிகச்சிறப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மென்பொருட்கள் 4 இனைக் குறிப்பிடுக?
5) வேலைவாய்ப்பின் பொருட்டு நேர்முகத் தேர்வு எவ்வகை ஊடகப்பிரதி நிதித்துவத்துள் உள்ளடங்கும்?.
6) அச்சிடப்பட்ட ஆவணத்தின் வன்பிரதியொன்றை (hardcopy) தனது தனிப்பட்ட தேவைக்காகப் பெற்றுக் கொள்ள பிருந்தா உத்தேசித்துள்ளாள் இதற்குப் பொருத்தமான வழிமுறை யாது?.
7) அச்சு ஊடகத்தின் நான்கு வடிவங்களைப் பெயரிடுக?.
8) அச்ச ஊடகத்தின் பல வடிவங்களிலும் புகைப்படங்களின் பாவனை பொதுவாகக் காணக்கிடக்கிறது. புகைப்படத்தின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக?.
9) எறிவையற்ற ஊடக உபகரணங்கள் 4 தருக?.
10) இணையத்தளமொன்றின் பயன்பாடுகள் 4 இனைக் குறிப்பிடுக?. (10X2=20 புள்ளி)

02) புகைப்படங்களானது செய்தி, அறிவிப்பு, விளம்பரம் போன்றவற்றில் தேவைக்கேற்ப பயன்படுத்தப்படுகின்றன.

1.புகைப்பட கமராவின் இரு வகைகளைக் குறிப்பிடுக?. (1புள்ளி)
2.புகைப்படத்தின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக? (2புள்ளி)
3.புகைப்பட இதழியலின் வகைகள் மூன்றினைக் குறிப்பிடுக?. (3புள்ளி)
4.செய்திப் புகைப்படத்தின் சிறப்புக்களைச் சுருக்கமாக விளக்குக? (4புள்ளி)

03) ஊடகச் செய்தி உள்வாங்கலில் சமூகம் பொருளாதாரம், சமயம், நல்லொழுக்கம் மற்றும் அழகியல் என்பவை பிரிதிநிதித்துவப்படுவது எவ்வாறு என்பதை அறிந்து கொள்வதே பிரசைகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

1. வெகுஜன ஊடக சமூகப் பிரிதிநிதித்துவக் கற்கையில் உள்ளடங்கும் அம்சங்கள் நான்கினைத் தருக?.
2. சமூகக் குடியுரிமைப் பிரதிநிதித்துவத்துள் பிரசையொருவரின் பண்புகள் காட்டப்படும் விதங்கள் நான்கினைக் குறிப்பிடுக?.
3. பொருளாதாரப் பிரிதிநிதித்துவத்தின் உள்ளடங்கும் அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக?.
4. வெகுஜன ஊடகப் பிரிதிநிதித்துவக் கற்கையில் சமய ஒழுங்கமுறைப் பிரதிநிதித்துவம் ஏன் அவசியம் என்பதனைச் சுருக்கமாக விளக்குக?.

04)

தொடர்பாடுவர் → செய்தி → ஊடகம் → பெறுநர் → X

1) மேற்குறித்த வரிப்படம் கரோல்ட் லாஸ்வெல்லின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்குமானால், இறுதியிலுள்ள X ஐப் பெயரிடுக?.
2) தொடர்பாடலின் செயற்பாடுகள் X உடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளன தொடர்பாடலின் நான்கு முக்கியமான செயற்பாடுகளும் யாவை?.
3) பாடசாலை வகுப்பறையில் பயன்படுத்தக் கூடிய எறிவை சார் ஊடக உபகரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவை பயன்படுத்தப்படும் முறைகளைச் சுருக்கமாக விளக்கக?.
4) மேற்குறித்த வரிப்படத்தின் மூலம் எடுத்துக்கூறப்பட்ட தொடர்பாடல் செயன்முறை வெகுஜன ஊடகங்களிலும் நடைபெறுகிறது. வெகுஜன ஊடகங்களின் நான்கு முக்கிய இயல்புகளை விபரிக்குக?.

05)

1) வாய்மொழித் தொடர்பாடலின் வெற்றிக்கு மொழித்திறன் அவசியமாகும். பேச்சாளர் மொழியை பயன்படுத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய மூன்று அம்சங்களைக் குறிப்பிடுக?.
2) வாய்மொழியல்லாதத் தொடர்பாடலின் பாரம்பரிய வடிவங்கள் 4 தருக?.
3) முறைசார் தொடர்பாடல் பற்றிச் சருக்கமாக விளக்குக?.
4) முறைசாரத் தொடர்பாடல் வடிவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக?.

06) வெகுஜன ஊடக நிறுவனங்களை அவதானிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின் ஊடக நடவடிக்கைகளை மிகச்சிறப்பாக பகுப்பாய்வுக்கு உட்படுத்த முடியும்.

1) இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது செய்திப்பத்திரிகை எது?.
2) பத்திரிகை வரலாற்றில், தனிப்பட்ட முறையில் ஆசிரியர் உரிமைத்துவத்துடன் வெளியிடப்பட்ட செய்திப்பத்திரிகைகள் 4 இனைக் குறிப்பிடுக?
3) செய்திப்பத்திரினையொன்றில் பிரதான ஊடகவியலாளர் அதன் பிரதம ஆசிரியரே ஆவார். பிரதம ஆசிரியரின் கடமைகள், பொறுப்புக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
4) தொலைக்காட்சி விளம்பரங்கள் சமூகத்தில் ஏற்படுவதிலும் தாக்கம் பற்றியும் சுருக்கமாக விளக்குக?

07)

1) ‘‘புத்தகங்களுக்கு முகப்பு அட்டை அவசியமான ஒன்றல்ல’’ மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக?.
2) ‘‘இலங்கையில் முதன்முதலாக அச்சிடப்பட்ட தமிழ்ச் செய்திப்பத்திரிகை , உதயதாரகை ஆகும். மேற்குறித்த் கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்ளிறீர்களா? உங்கள் விடைக்கான காரணத்தினைத் தருக?
3) அச்சு ஊடகத்தில் புகைப்படங்களை இணைப்பது அனுகூலமான ஒன்று’’ மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான நான்கு காரணங்களைத் தருக?.
4) ‘‘ஒரு செய்தி முறையாகப் பெறுநருக்கு எடுத்துச் செல்லப்படாதிருக்கும் போது’’ மொழி ரீதியான இடையூறு உருவாகின்றது.’’ மேற்குறித்த கூற்றை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கான மூன்று காரணங்களைத் தருக?.